அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் 2016-2017

# அலகுத்தேர்வு – II

## தமிழ் முதல் தாள் – பத்தாம் வகுப்பு

(செய்யுள், உரைநடை)

காலம் : 2.30 மணி
மதிப்பெண்கள்:100

குறிப்பு: 1. இவ்வினாத்தாள் ஐந்து பிரிவுகளை உடையது.
2. விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

### பிரிவு - I (மதிப்பெண்கள்-20)

பகுதி-1

**அ) உரிய விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக** (6 x 1 = 6)

1. மாணிக்கவாசகர் பிறந்த ஊர்
அ) திருநின்றவூர் ஆ) திருவாதவூர் இ) திருப்பெருந்துறை
2. கேழல் என்பதின் பொருள்
அ) முயல் ஆ) சிங்கம் இ) பன்றி
3. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எனப் பாடியவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி
4. வள்ளலாரின் இயற்பெயர்
அ) சம்பந்தர் ஆ) தாயுமானவர் இ) இராமலிங்கர்
5. காந்தியடிகளை, உண்மையே பேச வேண்டும் என்று உறுதி கொள்ளச் செய்ய நாடகம்.
அ) சிரவணபிதுர்பத்தி ஆ) அரிச்சந்திரன் இ) பக்த பிரகலாதன்
6. மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர்
அ) மு.வரதராசனார் ஆ) பேரறிஞர் அண்ணா இ) கி.ஆ.பெ.விசுவநாதம்

பகுதி-2

**அ) நிரப்புக** (6 x 1 = 6)

7. "அரி" என்னும் சொல்லின் பொருள் __________
8. சேக்கிழார் பெருமான் அருளிய நூல் __________
9. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு __________ இருக்கும்.
10. குடும்ப விளக்கின் ஆசிரியர் பெயர் __________
11. கம்பரைப் புரந்தவர்__________
12. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி __________

பகுதி-3

**இ) பொருத்துக** (4 x 1 = 4)

13. மடங்கல் – துன்பம்
14. எண்கு - சிங்கம்
15. இறை - கரடி
16. இடர் – தலைவன்

பகுதி-4

**ஈ) விடைக்கேற்ற வினா அமைக்க.** (4 x 1 = 4)

17. தமிழர்கள் அரபு நாட்டுடனும், யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.
18. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டுமென விரும்பியவர் பெரியார்.
19. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி, ஒலிப் படக்கருவி பயன்படுகின்றது.
20. காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் என்று கருதினார்.

### பிரிவு - II (மதிப்பெண்கள்-20)

பகுதி-1

**உ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை தருக.** (5 x 2= 10)

21. உயிரினும் ஓம்பப்படுவது அது? ஏன்?
22. பழியில்லா மன்னனாய் வாழ்பவரின் பண்புகளாகப் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?

கல்வி அமுது http://kalviamuthu.blogspot.com கல்வி அமுது
Scanned by CamScanner

23. குகனின் வேண்டுகோள் யாது?

24. "நும்பேர் எழுதாதே வேறொரு பேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல்"? யார் யாரிடம் கூறியது.?

25. போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?

26. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன?

27. அறிவு என்பது யாது?

பகுதி-2

**ஊ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை தருக.** **(5 x 2= 10)**

28. மொழிக்குரிய செவ்வியல் தன்மைகள் யாவை?

29. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?

30. காந்தியடிகளுக்கு இளம் பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர் பண்புகள் யாவை?

31. மொழிமாற்றம் என்றால் என்ன?

32. ஞாலம் பெயர்க்காரணம் கூறுக?

33. இராமலிங்கர், எங்கு, எப்போது பிறந்தார்?

34. பட்டப்படிப்புகளில் எவையேனும் நான்கனை எழுதுக.

பிரிவு - III (மதிப்பெண்கள்-24)

பகுதி-1

**எ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.** **(3 x 4= 12)**

35. சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை?

36. கம்ப ராமாயணம் சிறுக்குறிப்பு வரைக.

37. தமிழ்மொழி வளர்ச்சி அடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை?

38. புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை?

39. 'சாதனைப் பூக்கள்' என்று இளந்திரையன் எவற்றைச் சுட்டுகின்றார்?

பகுதி-2

**ஏ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.** **(3 x 4= 12)**

40. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?

41. அம்பேத்கார் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?

42. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்.

43. கடல்வாணிகம் குறித்து எழுதுக.

44. மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?

பிரிவு - IV (மதிப்பெண்கள்-10)

பகுதி-1

**ஐ) கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.** **(5)**

45
"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை"

i.போற்றுதல் என்பது யாது?

ii.இப்பாடலின் ஆசிரியர் யார்?

iii.அன்பெனப்படுவது - பிரித்து எழுதுக?

iv.'ஒழுகுதல்' – இலக்கணக் குறிப்பு தருக?

v.பண்பு எனப்படுவது யாது?


Scanned by CamScanner

46. கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து, வினாக்களுக்கு விடையளிக்க. (5)

தமிழினம் தனக்குவமையில்லா ஒரு தனி இனம். தமிழர் நாகரிகம் தன்னிகரில்லா தனி நாகரிகம். தமிழர் உணவு, உடை விருந்து, ஈகை, பொறை, அருள், நடுவு நிலைமை ஆகிய பண்புகளால் சிறந்திருந்தனர். உழவையும், தொழிலையும் மதித்திருந்தனர். வினையை உயிர் எனக் கருதினர் ஆடவர். சான்றோன் ஆதலே கல்வியின் முடிவெனப் போற்றினர். விருந்தெதிர்கொண்டு வாழ்ந்தனர். புகழ் எனில் உயிரும் கொடுக்குவர். பழியெனில் உலகையும், பெறவும் மறுத்தனர். ஈந்து, உவந்து இன்பம் கண்டனர். இத்தகைய நாகரிகமும் பண்பாடும் மிக்கவராகத் தமிழர் வாழ்ந்தனர்.

வினாக்கள்.

i.கல்வியின் முடிவு யாது?

ii.தமிழினம் எத்தகையது?

iii.தமிழர்களின் நாகரிகம் எத்தகையது?

iv.தமிழர்களின் பண்புகள் யாவை?

v.இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு தருக?

## பிரிவு - V (மதிப்பெண்கள்-26)

### பகுதி-1

**ஒ) கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளுக்கு மிகாமல் விடை தருக.** (2x8=16)

47. ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது)
"தேரா மன்னா" என விளித்து, கண்ணகி கூறிய கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

48. செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகள் குறித்து எழுதுக. (அல்லது)
கலை, அறிவியல் கல்வி, சிறுதொழில்கல்வி குறித்து விவரிக்க.

### பகுதி-2

**ஒ) செய்யுள் வடிவில் விடை தருக.** (2x8=16)

47. அ) "நன்றிக்கு" எனத் தொடங்கும் குறள்.

ஆ) "கெடும்" என முடியும் குறள்.

இ) "மெய்தான்" எனத் தொடங்கும் வாழ்த்துப் பாடல்.

ஈ ) "மீன்நோக்கும்" எனத் தொடங்கும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்.

கல்வி அமுது http://kalviamuthu.blogspot.com கல்வி அமுது

Scanned by CamScanner